# பொங்கல் பரிசு தொகுப்பு கொள்முதல் பற்றி விவாதிக்கத் தயாரா?

## எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் சக்கரபாணி சவால்

சென்னை, ஜன.21

**பொங்கல் பரிசு தொகுப்பு கொள்முதல் பற்றி என்னுடன் விவாதிக்க தயாரா? என்று சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு, அமைச்சர் சக்கரபாணி சவால் விடுத்துள்ளார்.**

இதுதொடர்பாக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கல் தொகுப்பு கொள்முதலில் ரூ.500 கோடி ஊழல் என்றும் தரமற்ற பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் நாக்கூசாமல் அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

2.15 கோடி அட்டைதாரர்களுக்கு குறுகிய காலத்தில் 21 வகையான பொருள்கள் தரமாக வழங்க வேண்டும் என்பதற்காக உரிய முறையில் விலைப்புள்ளி கோரப்பட்டுக் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. 27.12.2021 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சரும் நானும் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரும் காணொலி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மண்டல இணைப் பதிவாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் கூட்டத்தை நடத்தி அனைவருக்கும் தரமான பொருள்கள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினோம். முதலமைச்சர் சென்னையில் பொதுவிநியோகத் திட்ட அங்காடிகளுக்குச் சென்று பொருள்களின் தரத்தையும் விநியோகத்தையும் ஆய்வு செய்தார். சில இடங்களில் தரமற்ற பொருள்கள் வழங்கப்பட்டதை மாற்றிக் கொடுத்ததோடு அதற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. தவறுக்கு இடம் கொடுக்காமல் வெளிப்படையாகவும் தவறு செய்தால் உரிய நடவடிக்கையும் எடுக்கும் ஆட்சிதான் முதலமைச்சர் அரசு.

எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியில் கடந்த பொங்கலுக்கு 20 கிராம் முந்திரிப் பருப்பு, 20 கிராம் திராட்சை, 5 கிராம் ஏலக்காய் ஆகிய 45 கிராம் பொருள்களுக்கு இவர்கள் வழங்கிய தொகை ரூ. 45. ஆனால் இந்த பொங்கலுக்கு எங்கள் ஆட்சியில் 50 கிராம் முந்திரி பருப்பு, 50 கிராம் திராட்சை, 10 கிராம் ஏலக்காய் ஆகிய 110 கிராம் பொருள்களுக்கு வழங்கிய தொகை ரூ. 62

இந்த மூன்று பொருள்களில் மட்டுமே ஒரு தொகுப்புக்கு ரூ.48 குறைவாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இவர்கள் ஆட்சியில் இந்த மூன்று பொருள்கள் கொள்முதலில் மட்டும் இவ்வளவு அதிகமாக ஏன் செலவழித்தார்கள்.

கடந்த ஆட்சியின் இறுதியில் பருப்புக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.120.50 என்ற விலையில் இறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்துவிட்டு, நாங்கள் கிலோ ரூ.78 முதல் ரூ.86 வரையிலான விலையில் இறுதி செய்து பருப்பு கொள்முதல் செய்தோம்.

### கொள்முதலில் வெளிப்படையான நடைமுறை

தி.மு.க ஆட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோருவது எளிமையாக்கப் பட்டுப் பலரும் கலந்து கொண்டு அவர்கள் கொடுத்த விலைப்புள்ளியில் குறைந்த வற்றிற்கு கொள்முதல் ஆணை வழங்கப்படும் வெளிப்படையான நடைமுறை கொண்டு வரப்பட்டதால், இதில் மட்டும் ஒரு மாதத்திற்கே ஒரு கொள்முதலில் ரூ.74.75 கோடி எங்கள் அரசால் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாககொள்ளையடித்து விட்டு அபாண்டமான ஆதாரமற்ற குற்றச்சாட்டைக் கூறியுள்ள எடப்பாடி பழனிசாமி பொங்கல் பரிசுத் தொகுப்பு கொள்முதல் பற்றி என்னுடன் விவாதிக்கத் தயாராயுள்ளாரா? இல்லாவிடில் இவர் தனது தவறான குற்றச்சாட்டிற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இந்தியாவில் 3½ லட்சத்தை நெருங்கிய கொரோனா பாதிப்பு

## ஒரே நாளில் 703 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி, ஜன. 21–

இந்தியாவில் இன்று 3 லட்சத்து 47 ஆயிரத்து 254 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக நாட்டில் கொரோனா பரவல் மின்னல் வேகத்தில் அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு தொடர்பான விவரத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று காலை வெளியிட்டது.

அதன்படி இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 254 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது நேற்றைய பாதிப்பான 3 லட்சத்து 17 ஆயிரத்து 532 மற்றும் நேற்று முன் தின பாதிப்பான 2 லட்சத்து 82 ஆயிரத்து 970ஐ விட அதிகமாகும்.

இதுவரை நாட்டில் 3 கோடியே 85 லட்சத்து 66 ஆயிரத்து 27 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 2 லட்சத்து 51 ஆயிரத்து 777 பேர் குணமடைந்துள்ளனர். இதுவரை கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 3 கோடியே 60 லட்சத்து 58 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 20 லட்சத்து 18 ஆயிரத்து 825 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாவுக்கு கடந்த 24 மணி நேரத்தில் 703 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால், இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 88 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அதிகபட்சமாக கர்நாடகாவில் 47,754 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பெங்களூருவில் மட்டும் 30,540 பேர் அடங்குவர். கேரளாவில் புதிய உச்சமாக நேற்று ஒரேநாளில் 46,369 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் புதிதாக 45,932 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மும்பையில் மட்டும் 5,208 பேர் அடங்குவர். குஜராத்தில் 24,485 பேருக்கும், உத்தரபிரதேசத்தில் 18,429 பேருக்கும், ராஜஸ்தானில் 14,079 பேருக்கும், ஆந்திராவில் 12,615 பேருக்கும், டெல்லியில் 12,306 பேருக்கும் தொற்று உறுதியானது.

நாடு முழுவதும் இதுவரை 160 கோடியே 43 லட்சத்து 70 ஆயிரத்து 484 தடுப்பூசி டோஸ்கள் மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

# 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் தேவை இல்லை : மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜன.21

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முக கவசம் தேவை இல்லை என மத்திய அரசு அறிவித்து உள்ளது.

குழந்தைகள் மற்றும் சிறார் தொடர்பான திருத்திய கொரோனா வழிகாட்டுதல்களை மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்டது. இதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ 5 வயது மற்றும் அதற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு முக கவசம் தேவை இல்லை. 6–11 வயதிற்குட்பட்டவர்கள், பெற்றோரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பாகவும், சரியான முறையிலும் குழந்தையின் திறனை பொறுத்து முக கவசம் அணியலாம். 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர் பெரியவர்களை போல முக கவசம் அணிய வேண்டும்.

★ கொரோனா, ஒரு வைரஸ் தொற்று ஆகும். தீவிரமற்ற கொரோனா தொற்றை சமாளிப்பதில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு (ஆன்டிமைக்ரோபியல்) எந்தப் பங்கும் இல்லை. எனவே அறிகுறியற்ற மற்றும் லேசான பாதிப்புகளுக்கு சிகிச்சை அல்லது நோய்த்தடுப்புக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பரிந்துரைக்கக்கூடது.

★ மிதமான மற்றும் கடுமையான பாதிப்புகளிலும் அதிகப்படியான நோய்த்தொற்றின் சந்தேகம் இல்லாவிட்டால், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பரிந்துரைக்கப்படக்கூடாது. மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ரத்தம் உறைதல் அபாயத்தை கண்காணிக்க வேண்டும்

★ கொரோனாவுக்கு பிந்தைய பராமரிப்பை பொறுத்தவரை, அறிகுறியற்ற அல்லது லேசான தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமான குழந்தை பராமரிப்பு, பொருத்தமான தடுப்பூசி (தகுதி இருந்தால்), ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் உளவியல் ஆதரவு ஆகியவற்றை பெற வேண்டும்.

# தமிழகத்தில் சிறப்பு முகாம்: 50 ஆயிரத்து 598 பேருக்கு 'பூஸ்டர்' தடுப்பூசி

சென்னை, ஜன.21

தமிழகத்தில் நேற்று நடந்த சிறப்பு முகாமில் 50 ஆயிரத்து 598 பேருக்கு 'பூஸ்டர்' தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 10ந்தேதி முதல் முன்களப்பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்கு கொரோனா 'பூஸ்டர்' தடுப்பூசி போடும் பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த நிலையில் வரும் 31ந்தேதிக்குள் 10 லட்சம் பேருக்கு 'பூஸ்டர் டோஸ்' தடுப்பூசி போட தகுதியானவர்கள் என சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது. இதையடுத்து அனைத்து தடுப்பூசி மையங்களிலும் சிறப்பு கவுண்ட்டர்கள் வைத்து 'பூஸ்டர்' தடுப்பூசி போடுகிறவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இந்த நிலையில் தமிழகம் முழுவதும் வியாழக்கிழமைகளில் 'பூஸ்டர்' தடுப்பூசி போட சிறப்பு முகாம் நடத்தப்படும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அந்த வகையில் நேற்று தமிழகம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவமனைகள், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் என மொத்தம் 600 இடங்களில் 'பூஸ்டர்' தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 50 ஆயிரத்து 598 பேருக்கு 'பூஸ்டர்' தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

# அரசு சின்னங்களை தவறாகப் பயன்படுத்தினால் நடவடிக்கை: டி.ஜி.பி. சைலேந்திரபாபு எச்சரிக்கை

சென்னை, ஜன.21

மத்திய–மாநில அரசு சின்னங்களை தவறாக பயன்படுத்துபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும், என்று டி.ஜி.பி. சைலேந்திரபாபு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது: முன்னாள் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், பொதுத்துறை நிறுவன அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பல்வேறு ஆணையகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பலர் மத்திய–மாநில அரசு சின்னங்களை தவறாக தங்களது வாகனங்களில் ஸ்டிக்கர்கள், கடிதங்கள், கொடிகள் மற்றும் பெயர்பலகைகளில்பயன்படுத்துவதாக தெரிய வந்ததால், உரிய நடவடிக்கை எடுக்க, காவல்துறைக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அரசு சின்னங்களை அனுமதி இன்றி தவறாக பயன்படுத்துவோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு வழிவகைகள் உள்ளது. அரசு விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட நபர்கள், அதிகாரிகள் தவிர மற்றவர்கள் அரசு சின்னங்களை பயன்படுத்தக்கூடாது. மேலும் முன்னாள் அமைச்சர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகளும் தங்களது வாகனங்களில் முத்திரை மற்றும் லெட்டர்பேடு, விசிட்டிங் கார்டுகளில் அரசு சின்னங்களை பயன்படுத்தக்கூடாது.

இதுபற்றி பொதுமக்கள் சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையங்களில் புகார் அளிக்கலாம். தவறாக பயன்படுத்தப்படும் அரசு சின்னங்களை சாட்சிகள் முன்னிலையில் பறிமுதல் செய்யவும், அந்த நிகழ்வை காணொலி காட்சியாக பதிவு செய்யவும், காவல்துறைக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நகை ஏல அறிவிப்பு

டி.ஆர்.எல்.(கே)7. கும்மிடிப்பூண்டி கூட்டுறவு தொடக்க வேளாண்மை (ம) ஊரக வளர்ச்சி வங்கி. எம்.வி.காம்ப்ளக்ஸ், ஜி.என். டீ.ரோடு, கும்மிடிப்பூண்டி 601 201. அறிவுரைப்படி, வங்கியில் 14.02.20 முதல் 15.09.20 முடிய காலளவில் வழங்கப்பட்ட நகைக் கடன்களில்,தவணை காலங்கடந்த பைசலாகாத நகைக்கடன்களுக்கு ஈடுகாட்டிய பொன் நகைகள் 29.01.2022 அன்று பகல் 12.00 மணியளவில் வங்கியின் அலுவலகக் கட்டிடத்தில், ஏலதாரர், திரு. ஜி. ரமேஷ்குமார் அவர்களால் ஏலம் போடப்படும். சம்மந்தப்பட்ட நகைக்கடன்தாரர்களுக்கு ஏலதாரரால் பதிவு தபால் மூலம் ஏல நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஏலத்தை தள்ளி வைக்க வங்கிக்கு உரிமையுண்டு மேற்படி விவரங்களுக்கு கூட்டுறவு வங்கியை அணுகவும்.

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள்.பொன்னேரி**
**ந.க.எண்.366/2021**

V.S.சியாமளா க/பெ ராமகிருஷ்ணன்
ரங்கநாதசுவாமி 2வது
தெரு,குரோம்பேட்டை,காஞ்சிபுரம்
மாவட்டம்,சென்னை44

.....மனுதாரர்

எதிர்

உயர்திரு.தாசில்தார் அவர்கள்,
பொன்னேரி வட்டம்

.....எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரராகிய எனது கட்சிக்காரர் V.S.சியாமளா த/பெ V. சேதுராமையா என்பவர் கடந்த 15/08/1950 அன்று 6/6A,ராமச்சந்திரன் தெரு,திருவாயர்பாடி,பொன்னேரி,திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் பிறந்ததை அவரது பெற்றோர் கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது பிறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்

மு.ஜோதிராமலிங்கம் MA ,B.Ed.,B.L.,
மனுதாரர் வழக்கறிஞர்.
நெ.133 T.H. சாலை (CSI CHURCH அருகில்) பொன்னேரி. 601204

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள்.பொன்னேரி**
**ந.க.எண்.239/2021**

P.M.கல்பனா த/பெ மது,
468,தியாகராய தெரு,
கீழ்முதலம்பேடு II,
கவரைப்பேட்டை, கும்மிடிப்பூண்டி
வட்டம், திருவள்ளூர் மாவட்டம்

.....மனுதாரர்

எதிர்

உயர்திரு.தாசில்தார் அவர்கள்,
கும்மிடிப்பூண்டி வட்டம்

.....எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரராகிய எனது கட்சிக்காரரின் மகன் க.குசால் தா/பெ கல்பனா என்பவர் கடந்த 01/06/2008 அன்று மேற்படி முகவரியில் பிறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது பிறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்

P.M.கல்பனா
மனுதாரர்.

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம். சென்னை அமர்வு முன்பாக**
CP (CAA)/62/(CHE)/2021
IN
CA (CAA)/52/CHE/2021
நிறுவனங்கள் சட்டம் 2013ன் 230 முதல் 232 பிரிவுகள் கீழ்
**ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்**
மற்றும்
**டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**
மற்றும்
அதன் **பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு**
இடையிலான ஒருங்கிணைக்கும் திட்டம் சம்பந்தமான விஷயத்தில்
**டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**
CIN: L15100TN1951PLC000640
நிறுவனங்கள் சட்டம் 1913–ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது
அதன் பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், கள்ளகுடி அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு – 621 651
...மனுதாரர்/மாற்றிக்கொள்ளும் நிறுவனம்

**அறிவிப்பு**

இதன் வாயிலாக அறிவிக்கப்படுவது யாதெனில் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 முதல் 232களின் கீழ் **ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்** மற்றும் **டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்** மற்றும் அதன் **பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு** இடையிலான ஒருங்கிணைக்கும் திட்டம் குறித்து மனுதாரர் நிறுவனத்தால் (**டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**) கூட்டு நிறுவன மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அதற்கான விசாரணைத் தேதியாக 10 பிப்ரவரி, 2022ஐ நிர்ணயித்து 23 டிசம்பர், 2021 அன்று தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு உத்தரவிட்டுள்ளது. எவரேனும் மேற்படி மனுவை ஆதரிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ இருப்பின் தங்களின் அறிவிப்பை சுயமாகவோ அல்லது தங்கள் வழக்கறிஞர் வாயிலாகவோ, தங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரர் வழக்கறிஞருக்கு 2 நாட்களுக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும். இம்மனுவை எதிர்ப்பதாக இருப்பின் தங்கள் எதிர்ப்புக்கான காரணங்கள் அல்லது பிரமாணப் பத்திர நகலை அத்தகைய அறிவிப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். மனுவின் நகல் எவருக்கேனும் வேண்டுமாயின் அதற்காக பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

20 ஜனவரி, 2022 தேதியிடப்பட்டது

**பவன் ஜபக்,** மனுதாரருக்கான வழக்கறிஞர்
புதிய எண். 115, முதல் தளம்,
லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004.

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம். சென்னை அமர்வு முன்பாக**
CP (CAA)/62/(CHE)/2021
IN
CA (CAA)/52/CHE/2021
நிறுவனங்கள் சட்டம் 2013ன் 230 முதல் 232 பிரிவுகள் கீழ்
**ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்**
மற்றும்
**டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**
மற்றும்
அதன் **பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு**
இடையிலான ஒருங்கிணைக்கும் திட்டம் சம்பந்தமான விஷயத்தில்
**ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்**
CIN: U67190TN1997PLC038989
நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது
அதன் பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், கள்ளகுடி அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு – 621 651 ...மனுதாரர்/மாற்றப்படும் நிறுவனம்

**அறிவிப்பு**

இதன் வாயிலாக அறிவிக்கப்படுவது யாதெனில் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 முதல் 232களின் கீழ் **ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்** மற்றும் **டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்** மற்றும் அதன் **பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு** இடையிலான ஒருங்கிணைக்கும் திட்டம் குறித்து மனுதாரர் நிறுவனத்தால் (**ஹிம்ஷிகர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்**) கூட்டு நிறுவன மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அதற்கான விசாரணைத் தேதியாக 10 பிப்ரவரி, 2022ஐ நிர்ணயித்து 23 டிசம்பர், 2021 அன்று தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு உத்தரவிட்டுள்ளது. எவரேனும் மேற்படி மனுவை ஆதரிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ இருப்பின் தங்களின் அறிவிப்பை சுயமாகவோ அல்லது தங்கள் வழக்கறிஞர் வாயிலாகவோ, தங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரர் வழக்கறிஞருக்கு 2 நாட்களுக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும். இம்மனுவை எதிர்ப்பதாக இருப்பின் தங்கள் எதிர்ப்புக்கான காரணங்கள் அல்லது பிரமாணப் பத்திர நகலை அத்தகைய அறிவிப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். மனுவின் நகல் எவருக்கேனும் வேண்டுமாயின் அதற்காக பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

20 ஜனவரி, 2022 தேதியிடப்பட்டது

**பவன் ஜபக்,** மனுதாரருக்கான வழக்கறிஞர்
புதிய எண். 115, முதல் தளம்,
லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004.

# தமிழகத்தில் நேற்று 28 ஆயிரத்து 561 பேருக்கு கொரோனா

## சென்னையில் 7,520 பேருக்கு தொற்று

சென்னை, ஜன.21

தமிழகத்தில் நேற்று 28 ஆயிரத்து 561 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 48 ஆயிரத்து 253 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 16,234 ஆண்கள், 12,327 பெண்கள் என மொத்தம் 28 ஆயிரத்து 561 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 7,520 பேரும், கோவையில் 3,390 பேரும், செங்கல்பட்டில் 2,196 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

குறைந்தபட்சமாக சிவகங்கையில் 138 பேரும், பெரம்பலூரில் 123 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் நேற்று வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரும், வெளிமாநிலங்களில் இருந்து வந்த 13 பேர் உட்பட 12 வயதுக்குட்பட்ட 905 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 4,064 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் இதுவரை 30 லட்சத்து 42 ஆயிரத்து 796 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 9 ஆயிரத்து 284 பேர் ஆஸ்பத்திரிகளில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 4 ஆயிரத்து 380 பேர் ஆக்சிஜன் வசதி படுக்கை கொண்ட வார்டுகளிலும், 1,032 தீவிர சிகிச்சை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாவுக்கு தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 20 பேரும், தனியார் ஆஸ்பத்திரியில் 19 பேரும் என 39 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்து உள்ளனர். இதுவரை மொத்தம் 37 ஆயிரத்து 112 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்து உள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 19 ஆயிரத்து 978 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டு உள்ளனர். இதுவரையில் 28 லட்சத்து 26 ஆயிரத்து 479 பேர் குணம் அடைந்து உள்ளனர். தமிழகத்தில் கொரோனா பாதித்த 1 லட்சத்து 79 ஆயிரத்து 205 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**HAP**

## ஹட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட்

CIN: L15499TN1986PLC012747

பதிவு அலுவலகம்: டொமைன், எண் 1/20A, ராஜீவ்காந்தி சாலை (OMR),காரப்பாக்கம், சென்னை - 600 097
Tel: 091-044-24501622 Fax: 044-24501422. Email: secretarial@hap.in | Website: www.hap.in

### 31.12.2021-உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ.லட்சத்தில் ஒரு பங்கு சம்பாத்தியம்)

| வ எண் | விவரங்கள் | 31.12.2021 முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாத) | 30.09.2021 முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாத) | 31.12.2020 உடன் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாத) | 31.12.2021 முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யப்படாத) | 31.12.2020 முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யப்படாத) | 31.03.2021 முடிந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | **1,58,499.93** | **1,63,541.83** | **1,39,459.40** | **4,76,512.84** | **4,00,087.05** | **5,56,974.31** |
| 2. | வரி, பிரித்யேக மற்றும் அசாதாரண பொருட்களுக்கு முந்தைய நிகர லாபம் | 5,946.39 | 10,518.57 | 10,087.66 | 23,926.38 | 27,678.88 | 36,415.29 |
| 3. | வரிக்கு முந்தைய, பிரித்யேக மற்றும் அசாதாரண பொருட்களுக்கு பிறகு நிகர லாபம் | 5,946.39 | 10,518.57 | 10,087.66 | 23,926.38 | 27,678.88 | 36,415.29 |
| 4. | வரி, பிரித்யேக மற்றும் அசாதாரண பொருட்களுக்கு பின் நிகர லாபம் / (நட்டம்), | 4,784.16 | 8,209.73 | 6,731.93 | 18,826.89 | 18,921.48 | 24,635.06 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் | **4,784.16** | **8,215.38** | **6,769.87** | **18,852.96** | **19,002.20** | **24,636.12** |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கு முகமதிப்பு ரூ.1/-) | **2,156.02** | **2,156.02** | **2,156.02** | **2,156.02** | **2,156.02** | **2,156.02** |
| 7. | கையிருப்பு (கடந்த ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கையில் உள்ள மறுமதிப்பீடு செய்யப்பட்ட கையிருப்பு) | 1,05,914.16 | 1,01,130.00 | 94,361.06 | 1,05,914.16 | 94,361.06 | 99,994.99 |
| 8. | ஒரு பங்கின் சம்பாத்தியம் (ரூ.1 க்கு) (Not Annualised) | | | | | | |
| | அ) அடிப்படை | **2.22** | **3.80** | **3.12** | **8.73** | **8.78** | **11.43** |
| | ஆ) எளிதாக்கப்பட்ட | **2.22** | **3.80** | **3.12** | **8.73** | **8.78** | **11.43** |

**குறிப்பு:**

மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ் பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். முடிவுற்ற காலாண்டுக்கான மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களிலும் (**www.bseindia.com** and **www.nseindia.com**), கம்பெனியின் இணையதளத்திலும் (www.hap.in) காணலாம்.

**ஹட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட்-க்காக,**
**கையொப்பம்**

இடம்: சென்னை
தேதி: 20.01.2022

**ஆர்.ஜி.சந்திரமோகன்**
சேர்மன்